**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க.எண்.4801/ஆ5/2025, நாள். 06.10.2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களது பிறந்த நாள் – 15.10.2025 இளைஞர் எழுச்சி நாள் விழா கொண்டாடுதல் – பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு மாவட்ட அளவில் கட்டுரை போட்டி, பேச்சுப் போட்டி மற்றும் அறிவியல் கண்காட்சி நடைபெறுதல் – மாணவர்கள் கலந்துக் கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.02232/ எம்2/ எஸ்2/2025, நாள். 06.10.2025

.....

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க மறைந்த முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் அவர்களது பிறந்த நாளான 15.10.2025 அன்று இளைஞர் எழுச்சி நாள் விழா கொண்டாடும் பொருட்டு அனைத்து அரசு /அரசு நிதியுதவி பெறும் நடுநிலை /உயர் / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு மாவட்ட அளவில் பேச்சுப் போட்டி, கட்டுரை போட்டி மற்றும் அறிவியல் கண்காட்சி கீழ்கண்டவாறு நடைபெறவுள்ளது.

**பேச்சுப் போட்டி, கடடுரை போட்டி, அறிவியல் கண்காட்சி**
**நாள்– 13.10.2025 (திங்கள்)**
**நேரம் – காலை 9.30 மணி**
**இடம் – அரசு (ஆண்கள்) மேல்நிலைப் பள்ளி, காட்பாடி**

<u>பேச்சுப் போட்டி தலைப்பு –</u>

1. டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் கண்ட கனவின் இன்றைய நிலை
2. இளைஞர்களின் மனங்களில் எழும் கலாம் சிந்தனைகள்.
3. இளைஞர்களின் எழுச்சியும் இந்தியாவின் வளர்ச்சியும்

<u>கட்டுரைப் போட்டி தலைப்பு –</u>

1. கல்வி பற்றிய டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் பார்வை
2. நான் விரும்பும் தலைவர் அப்துல் கலாம்
3. கலாம் கண்ட இந்தியாவில் இன்றைய இளைஞர்கள்

<u>அறிவியல் கண்காட்சி –</u>

மாணவர்கள் தங்களது அறிவியல் சார்ந்த படைப்புகளைக் கொண்டு பங்கு பெறுதல் வேண்டும்.

மேற்கண்ட போட்டிகளின் தலைப்புகளில் மாணவர்கள் ஏதேனும் ஒரு தலைப்பினை தேர்ந்தெடுத்து பங்கு பெறலாம்.

மேற்காணும்படி நடைபெறும் போட்டிகளில் மாணாக்கர்கள் கலந்து கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், மேலும் பேச்சுப் போட்டி, கட்டுரை போட்டி மற்றும் அறிவியல் கண்காட்சியில் கலந்துக் கொள்ளும் மாணவர்கள் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Google Form-ல் 07.10.2025க்குள் தவறாமல் பதிவுகள் மேற்கொள்ள அனைத்து அரசு நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு அறிவுறுத்துமாறு மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

15.10.2025 அன்று அனைத்து பள்ளிகளிலும் மறைந்த முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் முன்வைத்த வளர்ச்சிக் கருத்துக்கள் குறித்து தலைமையாசிரியர் / ஆசிரியர் மாணவர்களுக்கு ஒரு மணி நேரம் சொற்பொழிவு நடத்தவேண்டும்.

15.10.2025 அன்று NSS தன்னார்வளர்களைக் கொண்டு பாதுகாப்பாக இளைஞர் எழுச்சி பேரணி நடத்தி b5secceovellore@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –

1. பார்வையின் கடித நகல்
2. Google Form –
   https://docs.google.com/forms/d/e/1FAIpQLSduoZRBFoIXj1A9t5p_Y8dLAwsEojkbSTREYydgpgKFMZN4pg/viewform?usp=header

06.10.25

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி /தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
   அனைத்து வகை / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்.
   வேலூர் மாவட்டம்.

நகல்.

1. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. தலைமையாசிரியர்,
   அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, காட்பாடி
   (போட்டிகள் நடைபெறுவதற்கு போதிய வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். )